
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1274

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

74

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# இந்தி எதிர்ப்புப் போரில் இஸ்லாமியர்கள்!




**1965**-ஆம் ஆண்டின் குடியரசு தினம் முதல், இந்திய யூனியனின் அலுவல் மொழியாக இந்தியே இருக்கும் என்ற சட்டம் நிறைவேற்றப்படவிருந்த நிலையில், அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, இதுகுறித்த எச்சரிக்கையைக் கொண்டிருந்த ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே. 1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8, 9, 10 ஆகிய 3 நாட்கள் சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில், இந்தியை ஆட்சிமொழி என அரசியல் சட்டத்தில் நுழைத்து வைத்துக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்த அரசு சூழ்ச்சிகளை மேற்கொள்வதாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தை ஒட்டி, முத்தமிழறிஞர் தலைமையில் போராட்டக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதையொட்டி சேலம், தஞ்சை, நெல்லை, சென்னை என அடுத்தடுத்து இந்தி எதிர்ப்பு மாநாடுகளைக் கழகம் நடத்தியது. இதில், சென்னை இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கு முன்பாக, அக்டோபர் 5, 6 அன்று, திருச்சி மதுரம் விளையாட்டுத் திடலில், ‘மாணவர் இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாடு’ ஒன்று நடைபெற்றது. 50 மாணவர்கள் இம்மாநாட்டில் பேசினார்கள். அந்த வகையில், இது, உண்மையிலேயே சிறப்பு மாநாடுதான். அதுமட்டுமல்லாமல், முதல் இந்தி எதிர்ப்புப் போருக்குக் காரணமான ராஜாஜி, இந்தித் திணிப்புக்கு எதிராக முழங்கினார் இம்மாநாட்டில்.

இதே மாநாட்டில், இரண்டாவது நாள் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார், கண்ணியமிகு காயிதே மில்லத். “இந்தி எதிர்ப்பை முஸ்லிம் லீக் பாராளுமன்றத்தில் தெரிவித்துவிட்டது. அதைத் தொடர்ந்து, பொது மேடைகளிலும் பேசிவருகிறோம்; இன்னும் முஸ்லிம் லீக் கூட்டங்களில் முறையான முடிவுகளை எடுப்போம். மாணவர்களாகிய நீங்கள் - வஞ்சகத்தை அறியாத இளம் உள்ளம்கொண்ட நீங்கள் - அநீதியைக் கண்டு எவ்வாறு கொதித்தெழுகிறீர்கள் என்பதற்கு இம்மாநாடே சான்று!

உங்களது படிப்பு பாதிக்காத வகையில், நீங்கள் எடுக்கும் முடிவுகள் அமையட்டும்! உங்களுக்குக் கல்வி இன்றியமையாதது - உங்கள் பொருட்டு மட்டுமல்ல; எதிர்காலத்தை உருவாக்கும் பொருட்டும் கல்வி அவசியம். எனவே, நீங்கள் உலக நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்; உங்கள் ஆர்வத்தை அடக்கி முறைப்படுத்தி, பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்” என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அறிஞர் அண்ணாவின் உரையும் காயிதே மில்லத்தின் உரையை ஒட்டியே இருந்தது. மாணவர்கள் யாரும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டிய தில்லை என அறிவுறுத்தினார்.

அதன் பிறகு 13.10.1963 அன்று, சென்னையில் ‘இந்தி எதிர்ப்பு மாநாடு’ கூடியது. இம்மாநாட்டில்,அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் தீயிலிட்டுக் கொளுத்தும் ஆர்ப்பாட்டத்தை அறிவித்தார் அண்ணா. ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு போராட்டம் நடைபெறும் என்றார். மறியலில் ஈடுபடும் ஒவ்வொரு அணியும் ஐந்து பேரைக் கொண்டதாக இருக்கும், அதற்கு ஐவர் அணி என்று பெயரிட்டார். போராட்ட வீரர்களின் பட்டியலும் அம்மாநாட்டிலேயே வெளியிடப்பட்டது. மதுரையில் மு.காதர்சா, நெல்லையில் ஏர்வாடி எம்.மஸ்தான், முகமது மீரான், பெங்களூருவில் எஸ்.ஜே.உசேன் ஆகியோர் அறிவிக்கப்பட்டனர். காஞ்சியில் அப்துல்லா, சேக் மொய்தீன், தூத்துக்குடியில் சோ.மீ.முகமது மஸ்தான், சகுபர் அலி, பி.கே.காதர், கே.ஜேம்ஸ், செஞ்சியில் அந்தோணிசாமி, பவானியில் தாவூத் என அடுத்தடுத்த அறப்போர்களில் தமிழ்நாடெங்கும் சிறுபான்மையினர் எண்ணற்றோர் பங்கேற்றனர்.

### அறிவகத்தில் எடுக்கப்பட்ட முடிவு

இந்த அறப்போரின் நீட்சியாகத்தான் 1965-இல் தமிழ்நாடெங்கும் இந்தித் திணிப்புக்கு எதிரான மாணவர் போராட்டம் அமைந்தது. 8.1.65 அன்று, அறிவகத்தில் கூடிய கழகச் செயற்குழு, அந்த ஆண்டு குடியரசு நாளை, இந்தித் திணிப்புக்காகத் துக்கநாளாகக் கடைப்பிடிப்பது என முடிவெடுத்தது. கருப்புக்கொடிகள் கட்டுவது, கண்டனக் கூட்டங்கள் நடத்துவது எனத் தீர்மானிக்கப் பட்டது. இந்த அறப்போருக்கும், தான் உட்பட கலைஞர், நாவலர் உள்ளிட்டோர் அடங்கிய 23 பேர் கொண்ட வீரர்களை அறிவித்தார் அண்ணா. அந்த அறப்போர் வீரர்களின் சிறுபான்மைச் சமூக உடன்பிறப்பாக அண்ணாவால் இணைக்கப்பட்டிருந்தவர் உசேன்.

கர்நாடக மாநிலத்திலும் கழகத்தின் சார்பில், துக்க நாள் கடைப்பிடிக்கப்பட்டது. எஸ்.கே.உசேன் தலைமையில், அங்கு நடந்த அறப்போரில், 26 பேர் கைதுசெய்யப்பட்டனர். அதன்பிறகு, தமிழ்நாடெங்கும் மாணவர் போராட்டம் பற்றி எரிந்தது. மதுரை அமெரிக்கன் கல்லூரியில், அப்போது மாணவராக இருந்த ரகுமான் கானும் மாணவர் போராட்டத்தின் முக்கிய முகங்களில் ஒருவராக இருந்தார்.

அந்த ஆண்டு ஜனவரி 25-ஆம் நாள் தொடங்கி, மார்ச் 15 வரை 50 நாட்கள் போராட்டம் தொடர்ந்தது. சரியாக 50 நாட்கள் நீடித்த இப்போராட்டத்தில், 25 அஞ்சலகங்கள் தாக்கப்பட்டன. 25-க்கும் மேற்பட்ட புகைவண்டி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன. தமிழ்நாடெங்கும் ராணுவம் குவிக்கப்பட்டது. 70-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசித் தாக்கினர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 70-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். தமிழ்நாடெங்கும் சிறுபான்மையினரும் மாணவர் கிளர்ச்சியில் பின்னிப்பிணைந்தே இருந்தனர். சாதி- மத வேறுபாடுகளைக் கடந்து, தமிழ்நாட்டின் மொழி உரிமைக்காக வெடித்த அந்த மாபெரும் கிளர்ச்சிதான், 1967-இல் தமிழ்நாட்டின் அரசியல் திசைவழிப்போக்கைப் புரட்டிப்போட, அடிப்படையாய் அமைந்தது.

> “மொழி உரிமைக்காக வெடித்த அந்த மாபெரும் கிளர்ச்சிதான், 1967-இல் தமிழ்நாட்டின் அரசியல் திசைவழிப்போக்கைப் புரட்டிப்போட, அடிப்படையாய் அமைந்தது.”

...நீளும்

## மக்களை ஏமாளியாக்கும் விஜய்!

தமிழ்நாட்டின் உரிமை, மக்கள் நலன் எதற்கும் வாய்திறக்காத முதலமைச்சராக விஜய், மக்களை ஏமாற்றிவரும் நிலையில், “விஜய் அதிர்ஷ்டசாலி அல்லது மக்கள் ஏமாளி” எனப் பதிவிட்டுள்ளார், பத்திரிகையாளர் செந்தில்வேல். அவரது பதிவிலிருந்து…

“சொந்தக் கட்சித் தொண்டருக்குக் கொலை மிரட்டல் விடுக்கும் அமைச்சர்,
பவுடர் நுணுக்கிய அமைச்சர்,
செய்தியாளர்கள்மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய எம்.எல்.ஏ.,
பெண்களைப் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கும் த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் மாவட்டச் செயலாளர்,
பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளான எம்.எல்.ஏ.,
அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு லஞ்சம் கேட்ட அமைச்சர்,
போதைப்பொருள் கடத்தும் நிர்வாகிகள்,
படுகொலை செய்யப்படும் சிறுமிகள்,
இவற்றிற்கு மத்தியில்,
பின்னுக்குத் தள்ளப்படும் தமிழ்த்தாய் வாழ்த்து,
மெட்ரோவிற்கு அனுமதி மறுப்பு,
திருப்பரங்குன்றம் ஆவணப்படத்திற்கு அனுமதி மறுப்பு,
வந்தே மாதரம் பாடல் கட்டாயம்,
காவிரியில் வராத தண்ணீர்,
மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடகா,
அதற்குத் துணைபோகும் ஒன்றிய அரசு,
விண்ணை முட்டும் மின் கட்டணம்,
பல மணி நேர மின்தடை,
கட்டுக்கடங்காத ஆணவப் படுகொலைகள்,
அடுத்தடுத்த லாக்கப்-டெத்,
3 மாதத்தில் 20 ஆயிரம் கோடி கடன்,

இத்தனைக்குப் பிறகும் இவை எது குறித்தும் வாயே திறக்காத ஒரு முதலமைச்சர் எனில், ஒன்று... அவர் அதிர்ஷ்டசாலி அல்லது மக்கள் ஏமாளி!” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



சி.பன்னீர்செல்வன்



### தலைவர் தந்த திருக்குறள்!

2007-ஆம் ஆண்டு, நம் தானைத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, தேர்தல் நிதி அளித்து, வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். அப்போது, கோவை வடக்கு மாவட்டம், கண்ணார்பாளையம் வடக்கு கிளைக் கழகச் செயலாளராக இருந்தேன். நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் மேனாள் அமைச்சர், கழகத் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள், தலைவரிடத்தில் அழைத்துச்சென்றார். தலைவர் அவர்கள், திருக்குறள் நூல் அளித்து வாழ்த்தியது என்றும் மறக்கவியலாத நினைவுகள்.

**- சி.பன்னீர்செல்வன், கண்ணார்பாளையம், காரமடை ஒன்றியம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுத் துணைத் தலைவர், கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம்வருக

### மதுரையில் பிரம்மாண்ட வரவேற்பு!

1961-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரையில், மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில், கழகத்தின் ‘மூன்றாவது பொது மாநாடு’ நடைபெற்றது. நான்கு நாள்கள் நடைபெறும் மாநாட்டுக்காக ஜூலை 11-ஆம் தேதி, காலை 8 மணி அளவில், திருவனந்தபுரம் விரைவு ரயிலில், பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்துசேர்ந்தார். அண்ணா அவர்களுடன், மாநாட்டுத் திறப்பாளர் கே.ஏ.மதியழகன், சென்னை மேயர் வி.முனுசாமி, கண்காட்சித் திறப்பாளர் சத்தியவாணி முத்து, காஞ்சி சி.வி.இராஜகோபால் ஆகியோரும் வருகை தந்தனர். இவர்களை வரவேற்க, ரயில் நிலையத்திற்கு வெளியிலும் உள்ளும் மதுரை மாநகரமே திரண்டதுபோல மக்கள்வெள்ளம் திரண்டிருந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900